சுருக்கம்

நீர்வளஆதாரத் துறை –நபார்டு கடனுதவி– தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், சக்கரப்பள்ளி கிராமத்தில் செருமாக்கநல்லூர் மற்றும் சக்கரப்பள்ளி வாய்க்கால்களுக்கு நீர் வழங்க குடமுருட்டி ஆற்றின் குறுக்கே படுகை அணை கட்டும் திட்டம் –மதிப்பீடு ரூ.4.02 கோடி –நபார்டு வங்கியின் கடனுதவி எதிர்நோக்கி மாநில நிதியில் செலவினம்– நிர்வாக அனுமதி அளித்தல்–ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (டபிள்யூ1)த்துறை

அரசு ஆணை (நிலை ) எண் 90 | நாள் 18.3.2010
பங்குனி 4
திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம் கடித எண் எப்1/1300/ அறிவிப்புகள்/2008–09, நாள் 29.4.2008
2. அரசு கடித எண் 81053/ நி. ஆ II/2008, நிதித்துறை, நாள் 22.2.2009
3. மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மாவட்டம், கடித எண் 643/2009 / விவசாயம், நாள் 16.12.2009

---

ஆணை:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2008–2009ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித் துறையின் மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் (பொதுப்பணி மற்றும் சட்டம்) அவர்கள் ரூ.3.90 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், சக்கரப்பள்ளி கிராமத்தில் செருமாக்கநல்லூர் மற்றும் சக்கரப்பள்ளி வாய்க்கால்களுக்கு நீர் வழங்க குடமுருட்டி ஆற்றின் குறுக்கே படுகை அணை கட்டப்படுமென்று அறிவித்தார்.

2. அதன் அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், சக்கரப்பள்ளி கிராமத்தில் செருமாக்கநல்லூர் மற்றும் சக்கரப்பள்ளி வாய்க்கால்களுக்கு நீர் வழங்க குடமுருட்டி ஆற்றின் குறுக்கே படுகை அணை கட்டுவது குறித்த திட்டத்திற்காக ரூ 4.02 கோடி(2008–2009ஆம் ஆண்டு விலை பட்டியல்படி) மதிப்பீட்டிற்கு நபார்டுவங்கி கடனுதவி பெற்று, நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு தலைமைப்பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை கோரியிருந்தார். இத்திட்டத்திற்காக நபார்டு வங்கியிடமிருந்து நிதியுதவி பெறும் பொருட்டு மதிப்பீடு அனுப்பப்பட்டு அதன் ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது.

3. மேற்கண்ட சூழ்நிலையில், தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், நீர்வள ஆதாரத் துறை அவர்களின் கருத்துருவினை ஏற்றும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அவசர மற்றும் அவசிய தேவையினை கருதி, மேற்படி திட்டத்திற்கான செலவினை முதலில் மாநில நிதியிலிருந்து மேற்கொள்ளவும், பின்னர் நபார்டு வங்கியிலிருந்து மீளப் பெறலாமென்று அரசு முடிவு செய்து, தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், சக்கரப்பள்ளி கிராமத்தில்

செருமாக்கநல்லூர் மற்றும் சக்கரப்பள்ளி வாய்க்கால்களுக்கு நீர் வழங்க குடமுருட்டி ஆற்றின் குறுக்கே ரூ. 4.02 கோடி (ரூபாய் நான்கு கோடியே இரண்டு இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் படுகை அணை (Bed Dam) கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்;

"4701– பெரிய, நடுத்தர பாசன திட்டங்கள் குறித்த மூலதன செலவு–03–நடுத்தர பாசனம் – வணிகத்தன்மை வாய்ந்தது –பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பணிகள்–II மாநிலத் திட்டம் –345 –நடுத்தர பாசன திட்டங்கள் –JF ஊரக அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியம் 12ன் கீழ் 'நபார்டின்' கடனுதவியுடன் தற்போதுள்ள பாசனக் கால்வாய்கள் மற்றும் ஏரிகளைச் சீரமைத்தல் மற்றும் அணையை வலுப்படுத்துதல் –16 பெரும்பணிகள். (த.தொ.கு. 4701–03–345 –JF –1609)''

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணி (New Service) குறித்த செலவினமாகும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது–I)த்துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு செய்ய உரிய படிவத்தில், இவ்வரசாணையுடன் நிதி(வ.செ.பொது–I)த்துறைக்கு விண்ணப்பிக்குமாறு, முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை இறுதி துணை மானியக் கோரிக்கை 2009–2010ல் (Final Supplementary Estimates 2009-2010) சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது–II)த்துறைக்கு அனுப்புமாறும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை அ.சா. எண் 13629/ பொ.ப (II) /10 நாள் 13.3.2010–ல் பெறப்பட்ட நிதித்துறையின் ஒப்புதல் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண் 1793 (ஆயிரத்து எழுநூற்று தொண்ணூற்று மூன்று)–டன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித் துறை, சென்னை – 5.
தலைமைப் பொறியாளர், திருச்சி மண்டலம் .
நீர்வள ஆதாரத்துறை, திருச்சி–20.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சென்னை–5
தலைமைப் பொறியாளர் (வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்) ,
நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.

தலைமைப் பொறியாளர் (இயக்கம் மற்றும் பராமரிப்பு),
நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
முதன்மை கணக்காய்வு தலைவர் (A&E), சென்னை 18.
முதன்மை கணக்காய்வு தலைவர் (Audit-I), சென்னை18.
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர்.
மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர்.
பொது மேலாளர், நபார்டு வங்கி, (சென்னை மண்டலம்),
105, 106, மகாத்மா காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 34.

**<u>நகல்</u>**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்,
சென்னை 9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை 9.
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை 9.
நிதி (பொ.ப.II) / வ.செ.(பொ.I) /வ.செ.(பொ.II) (நி. ஆ. II) த்துறை,
சென்னை–9.
பொதுப்பணித்துறையில் உள்ள பாசனப் பிரிவுகள்.
இ.கோ/உ.ந

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்